**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை - பாடம் 16*

## *உபத்திரவம் 10*

## *யார் இந்த 144,000 பேர்?*

***வெளிப்படுத்துதல்7:4****, பிறகு முத்திரையிடப் பட்டவர்களின் எண்ணிக்கையைக் கேட்டேன். இஸ்ரவேலின் பல்வேறு குடும்பக் குழுக்களிலிருந்து அவர்கள் 144,000 பேர் இருந்தார்கள்.*

*வெளிப்படுத்தின விசேஷம் 7:5-7, இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்து 12,000 பேர்களை பற்றிய விவரங்களை அளிக்கிறது.*

*வேதவாக்கியம் அவர்கள் யூதர்கள் என்பதை தெளிவாகக் கூறுகிறது*

*நீங்கள் வெளிப்படுத்துதல் 7: 5-8-ல் பட்டியலிடப்பட்ட பன்னிரண்டு கோத்திரங்களை மறுபரிசீலனை செய்து பார்ப்பீர்களானால், தாண் கோத்திரம் காணாமலும், எப்பிராயீமின் கோத்திரம் மறுபெயரிடப் பட்டிருப்பதையும் நீங்கள் கவனிக்கலாம். (யோசேப்பின் கோத்திரம் என்பது எப்பிராயீமின் கோத்திரத்திற்கு மற்றொரு பெயர்.) இந்த*

*வேறுபாடுகள் பண்டைய இஸ்ரவேலின் வரலாற்றில் ஏற்பட்ட சில சம்பவங்களைப் பிரதிபலிக்கின்றன.*

*ஆதியாகமம் 46 ல், கானானிலுள்ள பஞ்சத்தின் காரணமாக இஸ்ரவேல் (யாக்கோபு என்றும் அழைக்கப்படுவர்) மற்றும் அவருடைய குடும்பத்தார் எகிப்திற்குள் நுழைவதைக் காண்கிறோம்.*

***ஆதியாகமம் 48:5**, இப்போது உனக்கு இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். நான் வருவதற்கு முன்னரே அவர்கள் இந்த எகிப்து நாட்டில் பிறந்திருக்கிறார்கள். உன் பிள்ளைகள் எனது சொந்தப் பிள்ளைகளைப் போன்றவர்கள். அவர்கள் எனக்கு சிமியோனையும் ரூபனையும் போன்றவர்கள்.*

*அவர் "நீண்டகாலமாய் தொலைந்திருந்த மகன்" யோசேப்போடே மகிழ்ச்சியுடன் ஒன்றுசேர்ந்து, யோசேப்பின் இரண்டு மகன்களாகிய மனாசேயையும், எப்பிராயீமையும் தன்னுடைய சொந்தமாக ஏற்றுக்கொண்டார்.*

*இந்த தத்தெடுப்பு இஸ்ரவேலின் இரண்டு பேரன்களை பதினோரு சித்தப்பாக்களுக்கு சமமான நிலைக்கு உயர்த்தியது. இறுதியில், எப்பிராயீமும், மனாசேயும் தங்கள் பெயர்களைக் கொண்ட கோத்திரத்திற்கு தலைவர்கள் ஆனார்கள்.*

***யோசுவா 14,** பன்னிரண்டு கோத்திரத்தினருக்கும் அவர்களுக்குரிய நிலம் கொடுக்கப்பட்டது. யோசேப்பின் ஜனங்கள் மனாசே, எப்பிராயீம் என்று இரண்டு கோத்திரங்களாகப் பிரிக்கப்பட்டனர்.*

*ஒவ்வொரு கோத்திரமும் நிலத்தைப் பெற்றனர். லேவி கோத்திரத்துக்கு எந்த நிலமும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் வசிப்பதற்கு சில ஊர்கள் மட்டுமே கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு கோத்திரத்தின் நடுவிலும் இந்த ஊர்கள் இருந்தன. அவர்களுடைய மிருகங்களுக்காக வயல்வெளி கொடுக்கப்பட்டிருந்தது.*

*யாத்திராகமத்தின் காலத்தில், எகிப்திலிருந்து புறப்பட்ட கோத்திரங்களின் எண்ணிக்கை பதின்மூன்று ஆகும், ஆனால் அவை முறையாக பன்னிரண்டு என கணக்கிடப்பட்டதிற்கு இதுவே காரணம். (யாத்திராகமம் 24: 4; உபாகமம் 33)*

*மோசே சீனாய் மலைமீது சென்று நாற்பது நாட்கள் தேவனுடன் இருந்தார். அவர் அப்படி இருக்கையில் ஆரோனும் அவனுடன் இருந்த மக்களும் தங்களிடமிருந்த தங்க நகைகளைக்கொண்டு ஒரு தங்க கன்றுக்குட்டியை செய்து அதற்க்கு பலி செலுத்தி அதனை வழிபட்டார்கள். மோசே திரும்ப வந்தபொழுதோ தேவனுடைய பார்வையில் இப்படிப்பட்ட தீய செயலை செய்தவர்களை கொலை செய்ய தொண்டர்களை முன்வர சொன்னார்.*

*லேவியரின் கோத்திரத்தார் முன்வந்து தங்கள் உறவினரும் இனத்தாருமான 3,000 பேரைக் கொன்றனர். லேவியர்கள் அவருடைய பெயரை வைராக்கியமாகக் கொண்டிருப்பதைக் தேவன் கண்டபோது, தேவன் அவர்களை தமது ஆசாரியராக உயர்த்தினார். (யாத்திராகமம் 32: 25-29 & உபாகமம் 33: 8-11)*

*தேவன் தனக்காக ஒரு ஆசாரியனை உருவாக்கினபொழுது, தேவனே அவர்களுக்குச் சுதந்தரமாயிருப்பாரென்றும், அவர்கள் தங்கள் நிலத்தின் சுதந்தரத்தைத் இழந்து போவார்கள் என்றும் அவர்களுக்குச் சொன்னார். கோத்தரங்களுக்கு வாக்களிக்கப்பட்ட விதமாக நிலம் பிரித்துக்கொடுக்கப்பட்டபோது, லேவியர்கள் எந்தப் பகுதியையும் பெறவில்லை. அதற்கு பதிலாக தேவன் அவர்களுக்கு மக்களின் தசமபாகங்களையும், படைத்தலையும் கொடுத்தார். எண் 18: 20-24.*

## *ஏன் தாண் கோத்திரம் காணப்படவில்லை?*

*தாண் கோத்திரத்தை வெளிப்படுத்துதல் 7-ல் உள்ள கோத்திரத்தின் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. வேதாகமம் அவர்கள் அழிக்கப்பட்டதாக சொல்லவில்லை, ஆனால் வேதாகம வல்லுனர்கள் அவர்கள் அழிக்கப்பட்டிருப்பார்கள் என கருதுகிறார்கள்.*

*அந்த நாட்களில் காட்டு தந்தை(Wild father) என அழைக்கப்பட்ட கானானின் வடக்குப் பகுதியை தாணின் கோத்திரம் ஆக்கிரமித்தது. யோசுவா 19: 40-47.*

*உங்கள் வேதாகமத்தில் "தாண் முதல் பெயெர்செபா" என்ற சொற்றொடரை நீதிமொழிகள் 20: 1, 1 சாமுவேல் 3:20, 1 இராஜாக்கள் 4:25 என்கின்ற வேதா வசங்களை நீங்கள் காணலாம்.*

*வடக்கில் இருந்து வரும் எதிரி படைகளை சந்திப்பதில் முதலில் தாண் கோத்திரம் இருந்திருக்குமானால்,*

*அதுவே இந்த கோத்திரம் அழிந்தமைக்கு காரணமாக இருக்கலாமோ?*

### பட்டியலில் லேவியர்களின் முக்கியத்துவம்

1. *உபாகமம் 33:8-11 புத்தகத்தில், மோசே லேவியருடன் சகல கோத்திரங்களையும் ஆசீர்வதித்து, இஸ்ரவேல் கோத்திரத்தில் லேவியரும் ஒரு கோத்திரமாக எண்ணப்பட்டது. பழைய ஏற்பாட்டில் இந்த ஒரே இடத்தில மாத்திரமே அவர்கள் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒன்றாக எண்ணப்பட்டிருக்கிறார்கள்.*

2. *வெளிப்படுத்துதல் 7 ல், அவர்கள் மற்ற கோத்திரத்தாரோடு என்னப்பட்டிருப்பதினால் ஒரு விதத்தில் அது அவர்களுக்கு பதவியிறக்கம் போல் காணப்படுகிறது. ஏனெனில் நாம் வந்திருக்கும் புதிய உடன்படிக்கைக்குள், தேவன் லேவிய ஆசாரியத்துவத்தை ஒழித்துவிட்டார். எபிரெயர் 7-ல், அப்போஸ்தலனாகிய பவுல் கூறியிருப்பதுபோல, இயேசுவே நம்முடைய பிரதான ஆசாரியனாக மாறியிருப்பதினாலே ஆசாரிய ஒழுங்கு அழிந்து போயிற்று.*

*இதோ நாம் வாழ்கின்ற இந்த 2018 ஆம் ஆண்டில், யூதர்களுக்கு தாங்கள் எந்த கோதரத்திரத்தை சேர்ந்தவர்கள் என்று தெரியாது. ஏனெனில் அணைத்து*

மரபுவழி பதிவுகளும் கி.பி. 70 இல் ரோமாபுரியர் வைத்த தீயில் அழிந்துவிட்டது. யூதர்களின் கோத்திரம் தேவன் ஒருவருக்கு மட்டுமே தெரியும்.

## *144,000 பேர்களின் அடையாளங்கள்*

1. வெளிப்படுத்துதல் 6:11; 7: 3; 10: 7 & 19: 2 இல் கூறியிருப்பது போல 'ஊழியர்கள்', 'ஊழியக்காரர்களாகிய தீர்க்கதரிசிகளும்,' தேவ ஊழியர்களும்'
2. இந்த 1,44,000 பேர் முத்திரைபோட்டுத் தீருமளவும் அந்த நான்கு தேவதூதர்களும் பூமியை காயப்படுத்த மாட்டார்கள். வெளிப்படுத்துதல் 7: 3
3. இந்த 1,44,000 பேர் தேவனுடைய முத்திரையை முதலில் பெற்றுக்கொள்வார்கள் (வெளிப்படுத்துதல் 7: 3) மற்றும் அவர்கள் பெரும் உபத்திரவத்தின் முதல் விலை பொருளாக (first fruits) அளிக்கப்படுவார்கள். அவர்கள் பெண்களால் தீட்டுப் பட்டிருக்கமாட்டார்கள், அவர்கள் எப்போதும் இயேசுவுடனே இருப்பார்கள். வெளிப்படுத்துதல் 14: 4.
4. எண்ணற்ற ஜனங்கள் உபத்திரவத்தின் மத்தியில் கடந்து வந்தாலும் இந்த 144,000 பேர் மட்டும் தேவனால் எண்ணிக்கை செய்யப்பட்டு இருப்பார்கள். வெளிப்படுத்துதல் 7: 5-14.
5. இந்த 144,000 பேர் கிறிஸ்துவுக்காக பாடுகளை சகித்திருக்கிறதால், மற்றவர்களை விட மேலான

மரியாதைக்குரியவர்களாக இருப்பார்கள். எவரும் பாடக்கூடாத ஒரு சிறப்பு பாடலைப் பெறுவார்கள். வெளிப்படுத்துதல் 14: 1-3.

6. அவர்கள் வாயிலிருந்து எந்த ஒரு தவறான வார்த்தையோ பொய்யோ வராது. வெளிப்படுத்துதல் 14: 5
7. இந்த 144,000 பேர் பிதா மற்றும் குமாரனுடைய பெயர்களை தங்கள் நெற்றிகளில் அணிந்திருப்பார்கள். வெளிப்படுத்துதல் 14: 1 & 22: 3-4
8. இந்த 144,000 பேர்களும் ஆபிரகாமின் சந்ததியில் வந்த யூதர்களே. வெளிப்படுத்துதல் 7: 5-8

மகத்தான உபத்திரவம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பே, தேவன் இவற்றை செய்வார்

- தெரிந்துதெடுத்தல்
- அதிகாரம் கொடுத்தல்
- 144,000 ஊழியர்களை முத்திரை கொடுத்தல்

அவர்கள் மிகுந்த உபத்திரவத்தின்போது, தீர்க்கதரிசிகளாக அவரை சேவிப்பார்கள். இந்த ஊழியர்கள் தேவனுக்காக பேசுவார்கள். இஸ்ரவேலின் மத வெறியுடன்கூடிய துணிச்சலும் மற்றும் மிகுந்த அறியாமை காரணமாக, தேவனுடைய ஊழியர்களில் பெரும்பாலோர் கடந்த காலத்தில் தீர்க்கதரிசிகளுக்கு நடந்ததைபோல கொடிய துன்பங்களை அனுபவிப்பார்கள். (மத்தேயு 23:37)

*இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தார் யார் என்று தீர்மானிக்க வழி இல்லை என்றாலும், நமக்கு இஸ்ரவேலில் பன்னிரண்டு கோத்திரத்தார் உள்ளனர் என்று தெரியும். ஏனெனில் தேவன், நான்கு தேவதூதர்களை கொண்டு இந்த பூமியை காயப்படுத்துவதற்கு முன்னதாக ஒவ்வொரு கோத்திரத்தில் இருந்து 12,000 பேர்களை தேர்வு செய்து முத்திரை இடுவார்.*

*அவர்கள் இயேசு கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியர்களாக சேவை செய்கிறார்கள். அவர்கள் தங்களுடைய எஜமானின் கட்டளைகளை நிறைவேற்றுவார்கள். இயேசுவின் தீர்க்கதரிசிகளான அவர்கள் மிகுந்த உபத்திரவத்தின்போது "இயேசுவின் சாட்சியை" பிரசங்கிப்பார்கள். (வெளிப்படுத்துதல் 1: 9, 12:17, 19:10)*

*144,000 பேர் தங்கள் வார்த்தைகளால் மிகுந்த துன்பப்படுவார்கள். இதில் அநேகர், "தேவவசனத்தினாலும் தாங்கள் காக்கிற சாட்சியினாலும்" அழிந்துபோவார்கள். வெளிப்படுத்துதல் 6: 9)*

## பன்னிரண்டு கோத்திரத்துக்கான தேவனுடைய நோக்கம்.

*இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய திட்டத்தைக்குறித்துச் சொல்லியிருக்கிற இதுவே.*

***யாத்திராகமம் 19:4-6,*** *நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய*

*செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். 5. இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. 6. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்.*

எனவே, தேவனுக்கும் மக்களுக்கும் இடையில் நிற்க தேவன் அவர்களை நியமித்தார். பாவத்தில் விழுந்த மனிதனை, தேவனுடைய அன்பையும் வழிகளையும் காட்ட, இஸ்ரவேல் ஒரு ராஜ்ய மாக இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அப்படி நடக்கவில்லை.

***ஏசாயா 42:6-7,*** *நீர் குருடருடைய கண்களைத் திறக்கவும், கட்டுண்டவர்களைக் காவலிலிருந்தும், இருளில் இருக்கிறவர்களைச் சிறைச்சாலையிலிருந்தும் விடுவிக்கவும், 7.* **கர்த்தராகிய** *நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப்பிடித்து, உம்மைத் தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்.*

வன் மக்களை அடிக்கடி எச்சரித்திருந்தும், அவர்கள் கேட்கவில்லை. எனவே தேவன் அவர்களை அடிமைத்தனத்திற்குள்ளாக வழிநடத்தினார். ஏறக்குறைய 700 ஆண்டுகளுக்குப் பிறகு அப்போஸ்தலனாகிய பவுல் இதை மக்களுக்கு பிரமாதமாக விளக்குகிறார்.

***அப்போஸ்தலர் 13:47,*** *நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்.*

தேவனுடைய இந்த திட்டம் நிறைவேறவில்லை. எனவே, இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் 12,000 பேர்கள் தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்றுவார் என வெளிப்படுத்துதல் 7-ஆம் அதிகாரத்தில் கூறியிருப்பது நடப்பதற்க்காக நாம் காத்திருப்போம்.

அவர்கள், தேவனுடைய மக்கள் என்று காட்ட, அவர்கள் பின்பற்ற சில நியாயப்பிரமாணம் வழங்கப்பட்டது. பூமியின் பிற மக்களுடன் கலப்பு திருமணம் செய்யாதிருப்பதின் மூலம் முதலாவதாக அவர்கள் தங்களை தேவனுக்கென்று தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டும்.

***உபாகமம் 7:3-4,*** *3. அவர்களோடே சம்பந்தம் கலவாயாக; உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளைக் உன் குமாரருக்கும் கொள்ளாமலும் இருப்பாயாக. 4. என்னைப் பின்பற்றாமல், அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்கள் உன் குமாரரை விலகப்பண்ணுவார்கள்;*
*அப்பொழுது* ***கர்த்தருடைய*** *கோபம் உங்கள்மேல் மூண்டு, உங்களைச் சீக்கிரத்தில் அழிக்கும்.*

*உபாகமம் புத்தகம், இஸ்ரவேல் மக்களுக்கு வாக்களிக்கப்பட்ட நிலத்திற்குள் நுழைவதற்கு முன்பாக பிரசங்கிக்கப்பட்ட ஒரு தொடர்ச்சியான உபதேசங்கள் என நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால், வேதத்தின் சரித்திரத்திலிருந்து அதை அவர்கள் எவ்வாறு புறக்கணித்தார்கள் என்பதை நாம் தெளிவாக காணலாம்.*

*பழைய ஏற்பாட்டை வாசித்திருப்பீர்களானால் சிம்சோனையும், பெலிஸ்திய பெண்ணாகிய திலீலாவையும் பற்றியும் ஒவ்வொருவரும் அறிந்திருப்பீர்கள். பூமியில் வாழ்ந்த ஞானியான சாலொமோன் ராஜாவுக்கு, என்ன ஒரு துன்பகரமான முடிவு ஏற்பட்டது.*

***1 இராஜாக்கள் 11:1-3**, 1. ராஜாவாகிய சாலொமோன், பார்வோனின் குமாரத்தியை நேசித்ததுமல்லாமல், மோவாபியரும், அம்மோனியரும், ஏதோமியரும், சீதோனியரும், ஏத்தியருமாகிய அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேலும் ஆசைவைத்தான். 2. **கர்த்தர்** இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது; அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லியிருந்தார்; சாலொமோன் அவர்கள்மேல் ஆசைவைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருந்தான். 3. அவனுக்குப் பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்;*

அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள்.

சாலமோன் அயல்நாட்டில் மணந்த தன் மனைவிகளையும், மறுமனையாட்டிகளையும் நேசிப்பதன் மூலம் தேவனிடமிருந்து விலகி நின்றார். இது முழு தேசத்தையும் சிலைகளை வழிபடவும் மற்றும் பொய் தெய்வங்களை வணங்க வழி வகுத்தது. தேவனுடைய மக்கள் அவர் நோக்கம் நிறைவேற்ற எந்த ஆர்வமும் செலுத்தாத காரணத்தினால், தேவனால் ஒரு ஆசாரியர் நிறைத்த நாட்டை உருவாக்க முடியவில்லை.

சாலொமோன் மரணமடைந்த சுமார் 200 ஆண்டுகளுக்குப் பிறகு, வடக்குக் கோத்திரமான இஸ்ரவேலரை சிறைப்படுத்தினார். மற்றொரு 100 ஆண்டுகளில் தேவன் அவர்களை பாபிலோனுக்கு சிறைப்படுத்தினார். தேசத்திற்கு எதிரான தேவனுடைய கோபம், வெளிநாட்டினருடன் இஸ்ரவேலர் கொண்டிருந்த உறவுகளை முறிக்கவில்லை. பாபிலோனிய சிறையிருப்பின் எழுபது வருட காலப்பகுதியிலும், கைதிகளாய் இருந்த யூதர் கலப்பு திருமணம் செய்துகொண்டுதான் இருந்தனர்.

தேவன் கலப்பு திருமண உறவை தடை செய்தார், ஏனென்றால், இப்படிப்பட்ட காரியத்தை அவர்கள் செய்தால் அவர்கள் தேவன் இஸ்ரவேலரை தேர்ந்தெடுத்த நோக்கத்திலிருந்து விலகிவிவார்கள்.

நம்முடைய இருதயத்தின் சுய விருப்பமே நாம் தேவனுக்கு எதிராக பாவம் செய்ய தூண்டுகிறது. நாம்

*தேவனுடைய பெரிய அற்புதமான நோக்கைத்தை அறியாமல் இருப்பதே அதற்குக்காரணம்.*

*பாபிலோன் சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேலர் வெளியே வந்தபோது, அவர்கள் இன்னும் இந்த பாடத்தை கற்றுக்கொள்ளாதிருந்தார்கள்.*

*457 பி.சி. இல், இஸ்ரவேலின் ஆசாரியனும், நியாயப்பிரமாண ஆசாரியனுமாகிய எஸ்றா, எருசலேமுக்குச் சென்று, நகரத்தையும் ஆலயத்தையும் மறுசீரமைப்பு பண்ண கட்டளையிடுமாறு ராஜாவான அர்தசஷ்டாவிடம் வேண்டிக்கொண்டார். எஸ்றா தேவனுடைய சேவைக்கு அர்ப்பணித்திருந்தார், தேவனுடைய சித்தத்தை அவருடைய ஜனங்கள் நிறைவேற்றுவார்கள் என ஆவலோடு எதிர்பார்த்தார். எஸ்றா எருசலேமிற்க்கு வந்தார், தேவனுக்கு விரோதமாக நடந்துகொண்டிருக்கும் மக்களின் மனப்பான்மையைக் கண்டு ஆச்சரியப்பட்டார். நிலைமையை ஆய்ந்த பிறகு, எஸ்றா தலைவர்களை அழைத்தார்.*

***எஸ்றா 9:1-3**, 1. இவைகள் செய்து முடிந்தபின்பு, பிரபுக்கள் என்னிடத்தில் சேர்ந்து: இஸ்ரவேல் ஜனங்களும், ஆசாரியரும் லேவியரும் ஆகிய இவர்கள், கானானியர், ஏத்தியர் பெரிசியர், எபூசியர், அம்மோனியர், மோவாபியர், எகிப்தியர், அம்மோரியர் என்னும் இந்த தேசங்களின் ஜனங்களுக்கும், அவர்களுடைய அருவருப்புகளுக்கும் விலகியிருக்கவில்லை. 2. எப்படியென்றால், அவர்களுடைய குமாரத்திகளிலே தங்களுக்கும் தங்கள் குமாரருக்கும் பெண்களைக் கொண்டார்கள்;*

*இப்படியே பரிசுத்தவித்து தேசங்களின் ஜனங்களோடே கலந்துபோயிற்று; பிரபுக்களின் கையும், அதிகாரிகளின் கையும், இந்தக் குற்றத்தில் முந்தினதாயிருக்கிறது என்றார்கள். 3. இந்த வர்த்தமானத்தை நான் கேட்டபொழுது, என் வஸ்திரத்தையும் என் சால்வையையும் நான் கிழித்து, என் தலையிலும் என் தாடியிலுமுள்ள மயிரைப் பிடுங்கித் திகைத்தவனாய் உட்கார்ந்திருந்தேன்.*

*வெளிநாட்டு பெண்களை மனைவியாக கொண்டிருப்பவர்கள் அவர்கள் மனைவிகளை ஒதுக்கிவைக்குமாறும் இப்படியாக தேவனுடைய குரலுக்குக் கீழ்ப்படியும்படி எஸ்றா அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.*

***எஸ்றா 10:2-3**, 2. அப்பொழுது ஏலாமின் புத்திரரில் ஒருவனாகிய யெகியேலின் குமாரன் செக்கனியா எஸ்றாவை நோக்கி: நாங்கள் தேசத்து ஜனங்களிலுள்ள அந்நியஸ்திரீகளைச் சேர்த்துகொண்டதினால், எங்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; ஆகிலும் இப்பொழுது இந்தக் காரியத்திலே இன்னும் இஸ்ரவேலுக்காக நம்பிக்கை உண்டு. 3. இப்பொழுதும் அந்த ஸ்திரீகளெல்லாரையும், அவர்களிடத்தில் பிறந்தவர்களையும், என் ஆண்டவனுடைய ஆலோசனைக்கும், நமது தேவனுடைய கற்பனைக்கு நடுங்குகிறவர்களின் ஆலோசனைக்கும் ஏற்றபிரகாரம் அகற்றிப்போடுவோம் என்று நம்முடைய தேவனோடே உடன்படிக்கைப் பண்ணக் கடவோம்; நியாயப்பிரமாணத்தின்படியே செய்யப்படுவதாக,*

***எஸ்றா 10:10-12,*** *10. அப்பொழுது ஆசாரியனாகிய எஸ்றா எழுந்திருந்து அவர்களை நோக்கி: நீங்கள் இஸ்ரவேலின்மேலிருக்கிற குற்றத்தை அதிகரிக்கப்பண்ண மறு ஜாதியான ஸ்திரீகளை விவாகம்பண்ணினதினால் பாவஞ்செய்தீர்கள். 11. இப்பொழுதும் நீங்கள் உங்கள் பிதாக்களின் தேவனாகிய* ***கர்த்தரிடத்தில்*** *அறிக்கையிட்டு, அவருடைய பிரியத்தின்படியே செய்து, தேசத்தின் ஜனங்களையும், மறுஜாதியான ஸ்திரீகளையும் விட்டு விலகுங்கள் என்றான். 12. அப்பொழுது சபையார் யாவரும் மகா சத்தத்தோடே பிரதியுத்தரமாக: ஆம், நீர் சொன்ன வார்த்தைகளின்படியே செய்யவேண்டியதுதான்.*

***வெளி*** *14:4, ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக் குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்.*

*சுருங்கச் சொன்னால், 144,000 பேர் திருமணத்தால் களங்கப்படமாட்டார்கள், அவர்களுடைய குடும்பங்களின் காரணமாக அவர்கள் விசுவாச துரோகத்தில் சிக்க மாட்டார்கள். 144,000 பேர் தேவனுடைய நியமிப்பை வெற்றிகரமாக நிறைவேற்றுவார்கள்.*

*திருமண மோதல்கள் அல்லது குடும்ப நிராகரிப்பு ஆகியவற்றால் அவர்கள் தடுக்கப்படுவதில்லை.*

அவர்கள் சமரசம் செய்ய மாட்டார்கள். தேவன் அவர்களை நியமிப்பதற்கான அழைப்பு, பணி மற்றும் நோக்கம் ஆகியவற்றை அவர்கள் நிறைவேற்றுவர்.

## இணை(Parallel)

எஸ்றாவின் நாட்களில், தேவ ஆலயத்தில் சேவை தொடங்கவேண்டிய நேரத்தில், ஆண்டவருக்கு சேவை செய்வதற்காக, ஆசாரியர்கள் தங்கள் வெளிநாட்டு மனைவிகளையும் குழந்தைகளையும் விட்டு விலக அல்லது தங்கள் குடும்பத்தை விட்டு விலகவேண்டியதாய் இருந்தது.

இது மிகவும் வேதனையானது என்பதை நாம் காணலாம்

மகா உபத்திரவத்தின்போது, கர்த்தராகிய ஆண்டவரின் ஊழியனாக வர அழைப்பு வரும்பொழுது, 144,000 பேருக்கும் தேவனைச் சேவிக்க, தங்கள் அவிசுவாசிகளான குடும்பங்களை கைவிடுவதற்கான ஒரு தேர்வு இருக்கும். இது மிகவும் வேதனையாகும்.

இஸ்ரவேல் "புறஜாதிகளுக்கு ஒரு வெளிச்சம்", அல்லது "இரட்சிப்பின் பிரசங்கிகள்" என ஒருபோதும் மாறவில்லை. ஏனெனில், இஸ்ரவேலின் தலைவர்கள், விக்கிரகங்களை வணங்கும், மற்ற தெய்வங்களுக்கு தியாகங்களைச் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்தும் வெளிநாட்டு பெண்களை திருமணம் செய்துகொண்டு அவர்களோடு வாழ்ந்தார்கள்.

உலகெங்கும் 144,000 பேர் சிதறிவிடுவர். அவர்களில் பலர் திருமணம் செய்திருக்கலாம் அவர்களில் சிலரின் மனைவிகள் தேவனை நேசிப்பவர்களா அல்லது நேசிக்காதவர்களாக இருக்கலாம். இருப்பினும், அவர்கள் தங்களைத் தீட்டுப்படுத்தாமலும், சமரசம் செய்யாமலும் காத்துக்கொண்டார்கள்.

144,000 மக்கள் ஆபிரகாமைப் போல், தேவன் கட்டளையிட்டிருந்தால் தங்கள் ஒரே மகனைத் கூட தியாகம் செய்ய தயாராக இருப்பார்கள். தேவன் மேல் இப்படிப்பட்டதான பக்தி அசாதாரணமானது. ஆகையால், வேதாகமம் இந்த 144,000 பேர்கள் "தூய பக்தியாகத் தங்களை சுத்தமாக வைத்திருக்கிறார்கள்" என்று உயர்வாக தெரிவிக்கின்றது.

***ஏசாயா 56:3, கர்த்தரைச்*** சேர்ந்த அந்நியபுத்திரன்: **கர்த்தர்** என்னைத் தம்முடைய ஜனத்தைவிட்டு முற்றிலும் பிரித்துப்போடுவாரென்று சொல்லானாக; அண்ணகனும், இதோ, நான் பட்டமரமென்று சொல்லானாக.

பூர்வ காலங்களில், ஒரு மனிதன் தன்னை ஒரு அன்னகர்களாக மாற்றி, தன்னை தன் ராஜாவோடு பிணைக்க முடியும். இது இரண்டு நடைமுறை காரணங்களுக்காக எழுந்த கடுமையான மற்றும் மீற முடியாத செயல்முறை ஆகும்.

1. அன்னகர்களாகளின் சேவையை அரசர்கள் விரும்புவதாய் இருந்தது. ஏனென்றால், அவர்களது பணியில் அவர்களின் மனைவி அல்லது குடும்ப உறவுகளின் பாரங்கள்

*இல்லாமல் இருந்தது. தங்களுடைய ராஜாவின் சேவையில் எப்பொழுதும் இருந்தனர்; அவர்கள் பெரும்பாலும் முக்கிய அதிகாரம் உடையவர்களாக காணப்பட்டார்கள். (அப்போஸ்தலர் 8:27)*

2. *அன்னகர்கள் தங்களால் சிங்காசனத்திற்கு பிள்ளையைத் தர இயலாது என்று ராஜாக்கள் அறிந்தார்கள். ஆகையால், அரசர்கள் தங்கள் ராஜ்யத்தின் மிக முக்கியமான மற்றும் ஆபத்தான பகுதியை மேற்பார்வை செய்ய அன்னகர்களை நியமித்தனர். (எஸ்தர் 2:3). இளவாலிபர்கள் இந்த சிறப்புரிமை மற்றும் கனத்தையும் பெறுவதற்காக "ஆண்மையின் உரிமையை" கைவிடுவதற்கு தயாராய் இருந்தார்கள்.*

*144,000 மக்கள் இயேசு ராஜாவுக்கு அன்னகர்களை போல் இருப்பார்க்கள். 144,000 பேர் இயேசு எங்கு சென்றாலும் அங்கு தனிப்பட்ட ஆதரவைத் தருவார்கள். (வெளிப்படுத்துதல் 14: 4). 144,000 பேர்கள் நித்தியம் முழுவதும் மிகவும் மதிக்கப்படுவார்கள், ஏனெனில் அவர்களின் தந்தை ஆபிரகாமைப் போலவே, தேவனின் அழைப்பை எல்லாவற்றிற்கும் மேலாக கருதினார்கள்.*

*தேவனுடைய 144,000 ஊழியர்கள் (யோவேல் 2 இல் கூறியிருப்பது போல, ஆண்களும் பெண்களும்) கடுமையாக சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.*

- *தேவனை விட ஈசாக்கை அதிகமாக ஆபிரகாம் நேசித்தாரா என்று கடுமையாக சோதிக்கப்பட்டார். (ஆதியாகமம் 22: 2; எபிரெயர் 11:17)*

- *மோசே பார்வோன் மகளின் மகன் என அழைக்கப்படுவதற்கு தயாராக உள்ளாரா என்று தேவன் மோசேயை கடுமையாக சோதித்தார். (எபிரெயர் 11:24, 25)*

- *சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ தேவனுக்கு கீழ்ப்படிகிறார்களா என கடுமையாக சோதிக்கப்பட்டார்கள். தானியேல் 3: 16-18)*

- *தானியேல் தேவனிடம் தொடர்ந்து ஜெபிக்கத் முடிகின்றதா என கடுமையாக சோதிக்கப்பட்டார். தானியேல் 6:10*

- *தேவன் மீது உள்ள விசுவாசம் விவாதத்திற்கு உட்படாதது என முடிவு செய்ய, யோபு கடுமையாக சோதிக்கப்பட்டார். (யோபு 23:10)*

- *இயேசு பிசாசினால் வனாந்தரத்தில் கடுமையாக சோதிக்கப்பட்டார் (மத்தேயு 4: 1-11) மேலும் நம்மை போல எல்லா வழிகளிலும் சோதிக்கப்பட்டார். (எபிரெயர் 4:15)*

*144,000 பேர்களும் இயேசுவின் மீதான அன்பின் சோதனைகளையும், நிராகரிப்பையும் சமாளிப்பார்களா என்று கடுமையாக சோதிக்கப்படுவர்.*

## *ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் மற்றும் 144,000 பேர் (Seventh Day Adventist)*

*ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் வெளிப்படுத்துதல் கருத்தரங்கு ஆய்வுகள், பாடம் 26, "144,000", பின்வருமாறு கற்பிக்கின்றது.*

1. *ஏழாம் நாள் அட்வென்டிஸ்டுகள், 144,000 பேர்கள் யூதர்கள் அல்ல ஆனால் ஆவிக்குரிய இஸ்ரவேலர் என்று கற்பிக்கின்றனர்:*

*வெளிப்படுத்துதல் தெளிவாக கூறுகிறது இந்த 144,000 பேர்கள் "இஸ்ரவேல் புத்திரரின் கோத்திரங்களிலிருந்து" (வெளிப்படுத்துதல்7:4) ஆனால் ஏழாம் நாள் அட்வென்டிஸ்டுகள் போதிப்பதில் ஒரு பெரிய தவறு என்பதை கண்டுகொள்ளமுடிகின்றது.*

*மேலும், யோவான் அடுத்த நான்கு வசனங்களில் இந்த 144,000 மக்கள் எந்த இஸ்ரவேலின் கோத்தரத்திலிருந்து வந்தவர்கள் என்பதை தெளிவாக நமக்கு காட்டிக் கொடுக்கின்றார்.*

*இஸ்ரவேல் கோத்திரம், கோத்திரத்தில் இருந்து வந்தவர்கள் என்கிற விவரத்தை, ஏன் சம்பந்தம் இல்லாமல் 116 வார்த்தைகளை கொண்டு யோவான் விவரிக்கவேண்டும்?*

*இவர்கள் 1844-க்குப் பிறகு வாழும் பிற இணைத்தார்களாக இருப்பார்களானால், 144,000 மக்களும் தனித்துவமான கோத்திரத்தை சார்த்தவர்கள்*

*என்பதை விவரிக்கும் கடினமான முயற்சியில் ஈடுபட வேண்டும்?*

## 2. ***144,000 பேர்களும் ஏழாவது நாள் அட்வெண்டிஸ்ட்.***

*ஏழாவது நாள் அட்வெண்டிஸ்ட்ஸ் தங்களை அந்த 144,000 என வெளிப்படையாக சொல்லவில்லை, ஆனால் இது ஒரு மெல்லிய மறைமுக சூழ்ச்சி மட்டுமே. வெளிப்படுத்துதல் கருத்தரங்குகள், 144,000 மக்களுடைய "குணாதிசயங்களை" விவரிக்கும் விதத்தில், இந்த உயரடுக்கு குழுவில் உறுப்பினராக இருக்க, ஏழாவது நாள் அட்வெண்டிஸ்ட் சபையின் போதனைகளை கடைபிடிக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.*

- *அவர்கள் நடனம் தவிர்த்தனர்*
- *அவர்கள் நகைகளை அணிவதில்லை*
- *அவர்கள் புகையிலை பயன்படுத்துவதில்லை*
- *அவர்கள் மதுவை பயன்படுத்த மாட்டார்கள்*
- *அவர்கள் "அசுத்தமான" இறைச்சி சாப்பிட மாட்டார்கள்; மாறாக, தானியேலின் உணவான ("பழங்கள், கொட்டைகள், தானியங்கள் மற்றும் காய்கறிகள்") "சோதனைக்கு உட்பட்ட சிறந்த உணவு" உட்கொள்வார்கள்*

- *அவர்கள் காபி கலந்த பானங்கள் பயன்படுத்த மாட்டார்கள்*

- *24 மணி நேர கால ஓய்வுநாளை முழுமையாக அனுசரிக்க வேண்டும்*

*இந்த தனித்து தயாரிக்கப்பட்ட பட்டியல் ஏழாவது நாள் அட்வெண்டிஸ்டுகளுக்கு தனித்துவமானது. மிகச் சில பிரிவுகளே இந்த உறுப்பினர்கள் மீது இந்த சட்டப்பூர்வ தேவைகளை கட்டாயப்படுத்துகின்றனர். அட்வென்டிஸ்ட்ஸ் தங்களை 144,000 என்று கருதுகிறார்கள் என்பதில் ஒரு சிறு சந்தேகம் உள்ளது.*

*வெளிப்படுத்துதல் கருத்தரங்குகளால் வழங்கப்பட்ட பண்புகள் பட்டியல் மனிதனால் உருவாக்கப்பட்ட பட்டியல். இந்த பட்டியலை உருவாக்கிய காரணம், ஏழாவது நாள் அட்வென்டிஸ்ட் மக்களை இந்த 144,000 பேர்களோடு ஒப்பிடுவதற்கே. ஏனினில் இதுவே மக்களை ஏழாவது நாள் அட்வென்டிஸ்ட் திருச்சபையில் சேர்ந்து அந்த 144,000 பேர்களில் ஒன்றாக காணப்படும்படியான ஒரு தர்க்கரீதியான முடிவிற்கு தள்ளும்.*

*வேதாகமத்தின் படி, இந்த 144,000 பேருடைய குறிப்பானது நாம் பார்த்த இந்த பாடத்தில் 8 புள்ளிகளாக பட்டியலிடுகிறது. எனவே, ஏழாவது நாள் அட்வெண்டாக இருப்பீர்களானால் குழப்பம் அடையாமல் தயவுசெய்து இந்த ஆய்வை திறந்த மனதுடன் பாருங்கள்.*

### 3. *144,000 என்பது 1844 கி.பி. க்குப் பிறகு எழும் முடிவு நேர குழு.*

*மூன்று தேவதூதர்கள் செய்திகளை பிரகடனம் காலத்தில் இந்த 144,000 மக்கள், ஏழும் மக்கள் குழு ஏழாவது நாள் அட்வென்டிஸ்ட்ஸ் என்று நம்புகின்றனர். இதுபோல, 144,000 பேர்கள் கடைசி கால நேரத்து ஊழியர்கள் என்று நம்புகிறார்கள்.*

*"தீர்க்கதரிசனம் முடிவு காலத்தைக் குறிக்கிறது ... ஏனென்றால், 1844 முதல், தேவனுடைய நியாயத்தீர்ப்பு பரலோகத்தில் ஆரம்பித்தபின், மறுசீரமைப்பிற்கான இந்த விசேஷ செய்தி கடவுளுடைய சாயலான மனிதனுக்கா, மனதுக்கா, ஆன்மீக ரீதியிலான புதுப்பித்தலுக்கா வலியுறுத்தப்பட்டது"*

*ஏழாவது நாள் அட்வென்டிஸ்ட்ஸ், பாடம் 14ல் வெளிப்படுத்துதல், ஒரு தீர்ப்பு காட்சியை விவரிக்கிறது, இது 1844 ஆம் ஆண்டு துவங்கியதாக கருதப்படும் புலனாய்வுத் தீர்ப்பு என அவை விளக்குகின்றன. ஏனென்றால் 144,000 மக்கள் ஒரே பகுதியில் காணப்படுகிறார்கள். 1844 கி.பி.க்கு முன் 144,000 பேர் எழுந்திருக்க முடியாது என்று அட்வென்டிஸ்டுகள் வலியுறுத்துகின்றனர். ஆனால், வேதாகமம் என்ன கற்பிக்கிறது?*

1. *1844 கி.பி. வருடம், தானியேல் 8:14, இன் 2300 "மாலை-காலையில்" தவறான கணக்கீட்டை அடிப்படையாகக் கொண்டது.*

2. *வெளிப்படுத்துதல் 14 நீதியுள்ளவர்களின் விசாரணைக்காக ஒரு நீதிமன்ற-அறை போன்ற அமைப்பை பற்றி எதுவும் கூறுவதில்லை. மாறாக, மிருகத்தைப் பின்பற்றுவோரின் மீது நியாயத்தீர்ப்பை (அல்லது நீதியை) நிறைவேற்றுவது பற்றியதாகும்.*

3. *பேதுரு தனது முதல் நிருபத்தை எழுதியபோது நியாயத்தீர்ப்பு நேரம் ஆரம்பமானது. பேதுரு, 64 கி.பி. இல் காலமானார். எனவே இந்த கடிதம் அதற்கு முன்னர் எழுதப்பட வேண்டியிருந்தது.*

4. *வெளிப்படுத்துதல் 144,000 மக்கள் "மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்" என கூறுகிறது (வெளிப்படுத்துதல் 7:14). யோவான் மற்றும் மற்ற அப்போஸ்தலர்களுடனும் இயேசு ஒலிவ மலைமீது, அவருடைய சொற்பொழிவில் கலந்தாலோசித்த அதே "மகா உபத்திரவம்" இதுதான்.*

*எனவே, இந்த 144,000 பேர் இஸ்ரவேலின் யூதர்களிடமிருந்து வருகிறார்கள் என்பதை இந்த பாடம் காட்டுகிறது. மட்டுமல்லாமல், மகா உபாத்திரவத்தின் காலத்தை கடந்து செல்வது இஸ்ரவேல் தேசமே அன்றி, தேவனுடைய சபையல்ல, என்பதை உறுதிப்படுத்துகிறது.*